# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **O.S.No.193/2015** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **வா.சா– 03 ( PW– 03 )** |
| **பெயர்** | :- | **K. திருப்பதி த/பெ. கிருஷ்ணகவுண்டர்** |
| **தேதி** | :- | **24–02–2026** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை :–**

நான் 12-ஆம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். 06-ஆம் வாதி பெரியசாமி எனக்கு நண்பர் என்றால் இல்லை. பக்கத்து நிலத்துக்காரர். அவருடன் பேச்சுவார்த்தை உண்டு. நிரூபண ஆணையுறுதி தாயரிப்பதற்கான விவரங்கள் நான்தான் சொன்னேன். வாதிகள் பற்றியும் வழக்குச் சொத்துக்கள் பற்றியும் எனக்கு நேரடியாக தெரியும் என்று முதல் -விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கை யார் யார்மீது தொடுத்துள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் 10-ஆம் பிரதிவாதியை தவிர மற்ற பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக உள்ளனர் என்றால் சரிதான். 10-ஆம் பிரதிவாதி அருணை தவிர இந்த வழக்கின் மற்ற தரப்பினர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் பங்காளி உறவு முறையினர் என்றால் சரிதான். அவர்கள் மனகசப்பின்றி பேச்சுவார்த்தையில்தான் உள்ளனர் என்றால் இல்லை. அவர்களுக்குள் என்ன பிரச்சனைகள் என்றால் சொத்து பிரச்சனை.

முத்துசாமி என்கிற மாரிமுத்துவிற்கு 03 மகன்களா என்றால் மாரிமுத்துவிற்கு 03 மகன்கள். முத்துசாமி என்று யாரையும் எனக்கு தெரியாது. பெரம கவுண்டர், பெரியதம்பி, பரமசிவம் என்பவர்கள்தான் அந்த மூவர் என்றால் சரிதான். வாதிகள் பெரம கவுண்டரின் வாரிசுகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் எத்தனை பிரதிவாதிகள் உள்ளனர் என்று எனக்குத் தெரியும். அதில் ஒருவர் மருத்துவர் அருண் என்றால் சரிதான். மற்ற பிரதிவாதிகள் பெரிதம்பி, பரமசிவத்தின் வாரிசுகளா என்றால் அதற்கான பதிலை சான்றாளர் சொல்லவில்லை. கேள்வி புரியாததுபோல் இருக்கிறார்.

மாரிமுத்து மற்றும் அவரது மகன்கள் பெரம கவுண்டர், பெரியதம்பி, பரமசிவம் ஆகிய நால்வரும் ராஜமாணிக்கம் பிள்ளை என்பருக்கு வழக்குச் சொத்து உள்ளிட்ட சொத்துக்களை 7,000/- உரூபாய் கடனுக்கு கொதுவை கடன் பத்திரம் எழுதிக் கொடுத்தனர் என்றால் சரிதான். கடனை திரும்ப கொடுக்கவில்லை என்பதால் ராஜமாணிக்கம் முதலேற்பு வழக்கு எண் 2629/1981 என்ற வழக்கை மேற்சொன்ன நால்வர்மீதும் தொடுத்தார் என்றும் அந்த வழக்கில் ராஜமாணிக்கத்தின் நலசார்பாக தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரிதான். அந்த வழக்கு சம்மந்தமான ஆவணங்களை நான் படித்துப் பார்த்ததில்லை. மேற்சொன்ன விவரங்களை எனக்கு யார் சொன்னது என்றால் பரமசிவம். எப்போது சொன்னார் என்றால் ஆரம்பத்திலேயே சொன்னார். எப்போது சொன்னார் என்று குறிப்பிட்டு எனக்குத் தெரியவில்லை.

01.07.2004-ஆம் தேதியன்று வழக்குச் சொத்தை பொறுத்து பெரியதம்பியும் பரமசிவமும் பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்

கொண்டார்களா என்றால் எழுதிக் கொண்டார்கள். அந்த பத்திரத்தை நான் படித்துப் பார்க்கவில்லை.

இந்த வழக்கின் வாதிகள் வழக்குச் சொத்தில் பாகப்பிரிவினை கோரி சேலம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முதலேற்பு வழக்கு எண் 1037/2007- என்ற வழக்கை தொடுத்திருந்தனர் என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வழக்கின் 10-ஆம் பிரதிவாதி தன்னிச்சையாக மனு தாக்கல்செய்து தன்னையும் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டார் என்றால் சரிதான். அந்த வழக்கை வாதிகள் நடத்தாததால் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. மேற்சொன்ன வழக்கில் கண்ட அதே சொத்துதான் இந்த வழக்கிலும் வழக்குச் சொத்தாக உள்ளது என்றால் சரிதான்.

வழக்குச் சொத்து மொத்தம் எத்தனை இனங்களாக உள்ளது என்றால் 07-க்கு குறைவு இல்லாமல் இருக்கும். இந்த வழக்கின் 10-ஆம் பிரதிவாதி மொத்தம் எத்தனை இனச் சொத்துக்களை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சுமார் 10 அல்லது 15 புல எண்கள் இருக்கும். 10-ஆம் பிரதிவாதி கிரயம் வாங்கியுள்ள சொத்துக்கள் யாவும் 10-ஆம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் உள்ளன என்றால் வாதி பெரியசாமியிடமும் 03 ஏக்கர் உள்ளது. பெரியசாமியிடம் இருப்பதாக நான் சொல்லும் 03 ஏக்கர் இந்த வழக்கில் பிரச்சனையில் உள்ளதா என்றால் உள்ளது. 10-ஆம் பிரதிவாதி கிரயம் வாங்கிய மொத்த சொத்தில் 03 புல எண்ணை தவிர எஞ்சிய புல எண்கள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

வழக்குரையை நான் படித்து பார்த்து தகவல் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. 10-ஆம் பிரதிவாதி தாக்கல்செய்துள்ள எதிர்வழக்குரை -யின் விவரங்கள் எனக்குத் தெரியாது. எனக்குமுன் சாட்சி சொன்னவர்கள் என்ன சொல்லியுள்ளனர் என்று எனக்குத் தெரியாது.

வாதிகளே 10-ஆம் பிரதிவாதி வாங்கிய சொத்தின் சுவாதீனம் 10-ஆம் பிரதிவாதியிடம்தான் உள்ளது என்று சொல்லியுள்ளனர் என்றும் நான் அக்கறை உள்ள சான்றாளராக அவர்கள் சொன்னதற்கு மாறாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய சாட்சியத்தில் நம்பகதன்மையோ உண்மைதன்மையோ இல்லை என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District & Session Judge,
Salem.